மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021ம் வருடம் மார்ச் மாதம் 30ம் நாள்

சார்வரி ஆண்டு பங்குனி மாதம் 17 ம் நாள் செவ்வாய்கிழமை

**I.A . No. 266/2020**
**in**
**O.S. No. 98/2019**

ஜேம்ஸ் ஜேசுதாசன்

..... மனுதாரர்/பிரதிவாதி

//எதிர்//

முருகன்

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 18.02.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T. ராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.A. கோபால் அவர்கள் ஆஜராகியும், கடந்த 12.03.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கானது எவ்வித வழக்கு மூலத்தையும் வெளிப்படுத்தவில்லை என நிராகரிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ன்படி, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது பிரதிவாதியைக் கட்டுப்படுத்தி நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தானது வாதியின் தகப்பனாரிடமிருந்து 09.03.1987ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் வாதி இளவராக இருந்ததால், அவருக்கும் சேர்த்து வாதியின் தந்தையால் பிரதிவாதிக்கு கிரையம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதியின் வசமே உள்ளது என்றும், மேற்படி கிரைய பத்திரத்திற்கான குறைவான முத்திரை கட்டணம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டதால், இந்திய முத்திரை கட்டணச்சட்டம் பிரிவு 47(A)ன்படி மேற்படி கிரைய பத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டு, அது

தொடர்பாக மாவட்ட வருவாய்கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து மனுவின் மீதான நடவடிக்கைக்கு பின்பு பத்திரம் வாபஸ் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரம் அனைத்தும் எதிர்மனுதாரர்/வாதிக்கு நன்கு தெரியும் என்றும், தாவா சொத்தின் அனுபவத்தில் வாதி இல்லாத நிலையில் வாதி வழக்கு தாக்கல் செய்ய எவ்வித அருகதையும் இல்லை என்றும், தாவா பிராதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனுமதி கடிதம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடவில்லை என்றும், தாவா சொத்து தொடர்பான வழக்குமூலம் ஏற்பட்டதற்கான தெளிவான வாதுரையில்லை என்றும், எனவே அசல் வழக்கு பிராது நிராகரிக்கப்படவேண்டுமென்றும் இம்மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் தவறானவையாகும். 09.03.1987ம் தேதியிட்டு வாதியின் தந்தையால் மனுதாரர்/பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்து அது முதல் தாவா சொத்தின் அனுபவத்தில் பிரதிவாதி இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது உண்மைக்கு புறம்பானதாகும். மேற்படி கிரையம் பதிவு செய்து கொடுத்த தேதியில் வாதி இளவராக இல்லாமல் உரிமை வயதை அடைந்து விட்டதால் மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், அதேபோல மேற்படி பத்திரம் குறைவான முத்திரைக்கட்டணம் தொடர்பாக சட்டப்பிரிவு 47(A)ன்படி நிறுத்தி வைக்கப்பட்டு மதுரை கோட்டாட்சியர் நடவடிக்கை மேற்கொண்டார் என்றும், அது தொடர்பாக முத்திரைக்கட்டணம் செலுத்தி கிரைய ஆவணம் திரும்ப பெறப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ளவை பொய்யானதாகும். உண்மையில் தாவா சொத்தானது அரசாங்கத்தால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கு ஒப்படைக்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் என்றும், மேற்படி பஞ்சமி நிலங்களை குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே அனுபவம் செய்யமுடியும் என்றும், மேற்படி உண்மை சம்பவங்களை மறைத்து போலியான ஆவணங்களை உருவாக்கி மனுதாரர்/பிரதிவாதி வீண் வியாஜ்ஜியம் செய்து வந்ததால், பிரதிவாதிக்கு எதிராக வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அசல் வழக்கை கால தாமதம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இரு தரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டதில், அசல் வழக்குடன் 9 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவை எதிர்மனுதாரர்/வாதி தரப்பில்

எ.ம.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்தானது ஆதியில் மனுதாரர்/வாதியின் தகப்பனாருக்கு பாத்தியம் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. தாவா சொத்தானது மனுதாரர்/பிரதிவாதிக்கு 1987ம் வருடத்திய கிரைய பத்திரத்தின்படி மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியமானதாகி அது முதல் நாளது தேதி வரை அவரது அனுபவத்தில் இருந்து வருவதாகவும், தாவா சொத்திற்கும் எதிர்மனுதாரர்/வாதிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் ஏற்படாததால், அசல் வழக்கு பிராது நிராகரிக்கப்படவேண்டுமென மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதுரைக்கப்பட்டது. ஆனால் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அதனை நிரூபணம் செய்யும் பொருட்டு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால், உரிமையியல் விசாரணைநடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ன்படி அசல் வழக்கு நிராகரிக்கப்படுவது என்பது, அசல் வழக்கு பிராது மற்றும் அத்துடன் சேர்ந்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலே பிராது நிராகரிக்கப்படவேண்டுமென்றும், பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நிராகரிக்கக்கூடாது என்பது சட்ட நிலைப்பாடாகும். அதன்படி பரிசீலனை செய்யும்போது, தாவா சொத்தானது ஆதியில் எதிர்மனுதாரர்/வாதியின் பாட்டனாருக்கு பட்டா எண். 244ன்படி பாத்தியமானதாக இருந்து பின்னீடு அரசாங்கத்தால், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் என்ற அடிப்படையில் எதிர்மனுதாரர்/வாதியின் தகப்பனாருக்கு ஒப்படைக்கப்பட்டு, அது முதல் எதிர்மனுதாரர்/வாதியின் தந்தை அனுபவம் செய்து வந்து, அதன்படி எதிர்மனுதாரர்/வாதி தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருவதாகவும், மனுதாரர்/பிரதிவாதி போலியான ஆவணங்களை உருவாக்கி வீண் வியாஜ் ஜியம் செய்து வருகிறார் என்றும், தாவா சொத்து மனுதாரர்/பிரதிவாதிக்கு எப்பொழுதும் உரிமை பாத்தியம் மற்றும் அனுபவம் பாத்தியமாக இருந்து வரவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

4) பஞ்சமி நிலங்கள் தொடர்பான சட்டநிலைப்பாட்டினை பரிசீலனை செய்யும்போது, அவை 1892ம் வருடத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். மேற்படி சட்ட சரத்துக்களின் வகைமுறைகளின்படி தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு ஒப்படைக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை, 10 ஆண்டுகள் வரையில் எந்த நபருக்கும் விற்பனையோ, அடமானமோ செய்யக்கூடாது என்பதும், 10 ஆண்டுகளுக்கு பின்பு அதே தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவருக்கு மட்டுமே அடமானமோ, கிரைய விற்பனையோ செய்யவேண்டும் என்பதும் நிபந்தனையாகும். மேற்படி இரண்டு நிபந்தனைகளை மீறி எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்பதும் அதனை மீறி உருவாக்கப்படும் எவ்வித வில்லங்கங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதும்

நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். மேலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், பஞ்சமி நிலமாக வாதியின் முன்னோர்களுக்கு ஒப்படைக்கப்பட்டதாக வாதுரைக்கப்பட்டுள்ளதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. அதேபோல் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 1987ம் வருடத்திய கிரைய பத்திரத்தின் மூலம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள போதிலும் அதற்கு ஆதரவாக எவ்வித வருவாய்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

5) மேலும் மேற்படி 1987ம் வருட கிரைய பத்திரம் எ.ம.சா.ஆ.6 ஆக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் வாதியின் தந்தை," கருப்பன் தனக்காகவும், தனது மைனர் சுமார் 17 வயதுள்ள முருகனுக்கு தகப்பனும் கார்டியனும்" எனக்குறிப்பிட்டு கிரையம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எ.ம.சா.ஆ.6 கிரைய ஆவணம் ஏற்பட்ட தேதியில் எதிர்மனுதாரர்/வாதி உரிம வயதை அடைந்துவிட்டார் என்றும், அதற்கு ஆதரவாக அவரது திருமணப்பத்திரிக்கை எ.ம.சா.ஆ.8ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் எ.ம.சா.ஆ.6 ஆவணத்தில் "எனக்கு பூர்வீக சொந்தமானதாகவும், நாளது தேதி வரை சர்க்கார் தீர்வை முதலானவைகள் செலுத்தி சர்வ சுதந்திரபாத்தியதைகளுடன் அடைந்து அனுபவம் செய்து வருகின்றதுமான" எனக்குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி எ.ம.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின்படி தாவா சொத்து பஞ்சமி நிலம் ஒப்படைப்பு என்ற அடிப்படையில் பாத்தியமானதாக குறிப்பிட்டு கிரையம் பதிவு செய்து கொடுக்கவில்லை என்பதும், மாறாக பூர்வீக சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே தாவா சொத்தானது பஞ்சமி நில ஒப்படைப்பு மூலம் வாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டதா அல்லது பூர்வீக பாத்தியமானதா என்பது அசல் வழக்கு விசாரணையின் இறுதியில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலே தீர்வு காண இயலும். அதேபோல், மேற்படி கிரையம் பதிவு செய்யப்பட்டபோது எதிர்மனுதாரர்/வாதி இளவராக இருந்தாரா அல்லது உரிமை வயதை அடைந்துவிட்டாரா என்பதை அசல் வழக்கு விசாரணையில் மட்டுமே தீர்மானம் செய்ய இயலும். மேலும் இந்த நிர் அசல் வழக்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுவில் குறியீடு செய்யப்பட்ட எ.ம.சாஆ. 1 முதல் 9 ஆவணங்கள் மூலம் தாவா சொத்தானது எதிர்மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதற்கு ஆதரவான ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே தாவா சொத்தானது யாருக்கு உரிமை மற்றும் அனுபவ பாத்தியம் என்பது தொடர்பாக இம்மனுவில் தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதில் தாவா வழக்கிற்கு வழக்குமூலம் இல்லாததால், அசல் வழக்கு நிராகரிக்கப்படவேண்டுமென இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக மனுதாரர்/பிரதிவாதி தரப்பில்

வாதுரைக்கப்பட்டது. ஆனால் "வழக்கு மூலம் என்பது சங்கதிகளின் தொகுப்பு (Bundle of fact) ஆகும். அதன்படி இந்த நிர் அசல் வழக்கு பிராதும் தாவா சொத்து பஞ்சமி நிலம் ஒப்படைப்புபடி வாதியின் முன்னோர்களுக்கு மற்றும் தொடர்ச்சியாக வாதிக்கு பாத்தியம் என்றும் அதேபோல் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 1987ம் வருட கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து பாத்தியம் என்றும் முரண்பட்ட பொருண்மைகளாக வாதுரைக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி பொருண்மைகள் சங்கதிகளின் தொகுப்பாகவே கருத இயலும் என்ற நிலையிலும், அதுவும் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே தீர்வு காண இயலும் என்ற நிலையிலும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ன் படி தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவின் அடிப்படையில் அசல் வழக்கினை நிராகரிக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதுவும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்டவழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அசல் வழக்கு பிராது மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்களின்படியும், நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடுகளின்படியும் மனுதாரர் கோரும் இம்மனு பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதில்லை என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

எ.ம.சா.ஆ.1 - 21.07.2000ம் தேதியிட்ட வாதி பெயரிலான பட்டா அசல்
எ.ம.சா.ஆ.2 - 019.11.2020ம் தேதியிட்ட வாதி பெயரிலான அடங்கல் உண்மை நகல்
எ.ம.சா.ஆ.3 - 24.02.2021ம் தேதியிட்ட வாதி பெயரிலான கணினி பட்டா நகல்
எ.ம.சா.ஆ.4 - 25.01.2013ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் அசல்
எ.ம.சா.ஆ.5 - 1428ம் பசலிக்கான கிஸ்தி ரசீது அசல்
எ.ம.சா.ஆ.6 - 09.03.1987ம் வருடத்திய கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்

எ.ம.சா.ஆ.7 - 05.07.1991ம் தேதியில் இறந்த கருப்பன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல்

எ.ம.சா.ஆ.8 - வாதியின் திருமண பத்திரிக்கை அசல்

எ.ம.சா.ஆ.9 - வாதியின் ஆதார் அட்டை நகல்.

(ஓம்.D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//